உ

சிவமயம்.

# பழனி சுப்பிரமணியக் கடவுள்பேரில்

# சங்கீதரசமஞ்சரி.

இஃது
கொச்சிசமஸ்த்தானம்
வல்லங்கிமாநகரில் வசிக்கும்
சீதாராமசெட்டியார் அவர்கள் குமாரர்
சவுடப்பசெட்டியாரால்
பாடப்பட்டு

---

உடுமலைப்பேட்டை
வெ. கு. கந்தசாமிசெட்டியார்;
பெ. தி. அருணாசலம் செட்டியார்
இவர்கள் வேண்டுகோளின்படி

---

Mr: F. Scott Son of Mr: Petter Scott of
Cannanore Malabar.
வல்லங்கி மகா-ா-ஸ்ரீ காத்தமுத்துக்கோனார் அவர்கள் குமாரர்
நாச்சிமுத்துக்கோனார்
பொள்ளாச்சி தாலூக்கா கோட்டூர் மகா-ா-ஸ்ரீ
வெள்ளையன்செட்டியார் அவர்கள் குமாரர்
சின்னப்பன்செட்டியார்
இவர்கள் பொருளுதவியினால்

---

ஷை. சவுடப்பசெட்டியாரவர்களால்

---

பாலக்காடு சுல்த்தான் பேட்டை
விக்டோரியா பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1914.

இதன் விலை அணா 1.

781
2·14
OFFICE OF THE REGISTRAR ... 23 MAY 1914 MADRAS.
Q26:38.2119SPB.
N14
172200



சுபமஸ்து.

# சாத்துக்கவி.

வல்லங்கி சோ. அப்புக்குட்டிசெட்டியாரால்
பாடப்பட்டது.

---

கனகமலையெனப்புகலும்பழனிமலை தனில்வளருங்கந்தர்மீதில்
வினைகடரசங்கீதரசமஞ்சரிதனை விரித்தான்விமலன்றன்னை
மனமதனிற்குடிவைத்தசவுடப்ப னிதற்குமனமகிழாரில்லை
கனம்பொருந்தும்களஞ்சியமே போதாதுகொடுத்திடவுமென்பர்கற்றோர்.

திங்களணிசங்கரனார் செல்வனாகும் ;
திருப்பழனிமலைவளரும் செவ்வேள்மீதில்
சங்கயிலாமைத்துனனா முரமைபூண்ட
சவுடப்பனகமகிழ்ந்து தமிழால்சூட்டும்
இங்கிதம்சேர்சங்கீத ரசமஞ்சரியிற்சேர்ந்த
யினியசுவையெடுத்துரைக்க வெளிதோமுக்கட்
சங்கரனார்சகாயிதனக் குற்றசெல்வம்
தகமையுடன்கொடுத்திட்வும் போதாதென்பார்.

ஜோதிடத்தின்சுவையறிந்தோன் சுருதிமொழிப்
பயனறிந்தோன் சுரர்கள்போற்றும்
மாதவன்றன்மலர்ப்பதத்தை மனத்திடையே
வைத்திடுவோன் மகிமைசேர்ந்த
நீதியுறைமைத்துனனும் சவுடப்ப
னகமகிழ்ந்து நிகழ்த்தலாகும்
ஏதமிலாமஞ்சரிக்கி நிகரென்ப
தில்லையென விசைத்தேனம்மா.

---

உ

## பழனி சுப்பிரமணியக் கடவுள்பேரில்

# சங்கீதரசமஞ்சரி.

பங்கமிலாகங்கைநதி பரவுபழனுபுரிவாழ்
சங்கரனூர்பெற்றெடுத்த சண்முகர்மேல்—இங்கிதமா
மங்களஞ்சேர்சங்கீத ரசமஞ்சரிமாலையிட
சங்கைபெருமைங்கரனே காப்பு.

### பல்லவி.

இராகம்—ஆனந்தபைரவி. தாளம்—ஆதி.

கார்க்கநீவருவாயே கணநாதா

### அநுபல்லவி.

கார்க்கநீவருவாயே கரிமுகனேயென்னை
காமனுலையில்பட்டு கலங்கினேன் (கார்)

முத்தணிமார்பனே முப்புரிநூலனே
வித்தகவேதியனே யிவ்வேளையில் (கார்)

பேழைவயிற்றோனே வேழமுகத்தோனே
ஏழையின்கவிக் கிரங்காயீசன்மைந்தா (கார்)

கவிசவுடப்பனே கார்த்திடும்தீரனே
தவநிலைதந்தவனே தயாநிதி (கார்)

### பல்லவி.

இராகம்—ஆனந்தபைரவி. அடதாளம்.

தாயேவாணியிந்தத் தருணம்யெனையாளாய்

### அநுபல்லவி.

நீயேயெனக்குதுணை நித்தியகல்யாணி
நின்னையல்லால்கதி யுண்டோபுத்தகபாணி (தாயே)

### சரணம்.

எத்தனைகுற்றங்கள் செய்திருக்கினுமெந்தன்
இடர்தீர்க்க வேணுமம்மா மிக்க
பத்தியுடன்பணிந் தேத்துமடியனை
பாராததேனோசும்மா (தாயே)

நாலுவேதமுதற் கொண்டுதுதித்திடும்
நாமகளேயென்னைக் காரம்மா இப்போ

மேலும்சவுடப்பன் மீதிற்கருணைவைத்து
மேன்மைபெறக் கண்ணில்பாரம்மா (தாயே)

## பல்லவி.

இராகம்—கமாஸ். ஏகதாளம்.

சவுடேஸ்பரிவுன்னையேநான் சந்ததமும்போற்றினேன் சவு

## அநுபல்லவி.

கவுரிமகாமாயி பரையே காருமென்னை யன்னையே சவு
பவனிவரும்மாதரசே யென் பங்கில்வாழு மங்கையே சவு
தேவலருக் காதரவே தென்மதுரை யன்னயே சவு
ஏழைசவுடப்பன் தொழும் எங்கள்குல தேவியே சவு

## பல்லவி.

இராகம்—தன்னியாசி. தாளம்—ஆதி.

மன்னவனேமயில்வாகனனே நான் மன்மதன்வாதையில்வாடுறேனே.

## அநுபல்லவி.

இன்னமுந்தாமிதமாகுமோ சாமியென் னிருமுலைமீருதுசரவணபவகுக ம

## சரணம்.

குயில்களும்கூவுது மயில்களுமாடுது
கொஞ்சமுந்தயவில்லை குஞ்சரிலோலனே
துயில்கொளவில்லையரை துகில்மிகநழுவுது
துஞ்சுமயில்மேல்வரும் ரஞ்சிதசீலனே மன்
கன்னல்வில்மதன்வெகு கடுஞ்சினங்கொண்டிடன்மேல்
கடுகடுத்திடமிக விடுகிறான்பாணமும்
பொன்னிகர்பழனம் பதிவளர்சீலனே
பொருத்திடவழியில்லை போகுதென்னுணமும் மன்
பத்தினிவள்ளிமகிழ் பத்தரைமாற்றுள்ள
பசும்பொன்னேயெனக்கினி யிசைந்திடுங்குணமே
முத்தமிழ்கவிசவு டப்பன்பணியும்சீலா
முத்தமிட்டணைகுதி சுத்தவிட்சணமே மன்

## பல்லவி.

இராகம்—காபி. தாளம்—ரூபகம்.

சொன்னபேச்செங்கே சேடி சொன்னபேச்செங்கே.

## அநுபல்லவி.

மன்னனின்றுவருவாரென்று மார்க்கமாகநீயும் சொன்

1476
784.0959

## சரணம்.

நன்றிமரந்துசெய்ததெல்லாம் ஞாயமாகுமோகூருய்
தென்றற்சோலைதோரும்சென்று தேடியேநீயோடிவாருய் சொ
வுன்னைமறப்பதில்லையென்று வுறுதியாகச்சொன்னுரென்று
நன்னயமாய்சொன்னபடி நடந்ததோடிசேடியின்று சொ
பத்தன்சவுடப்பன்பணியும் பழனிமலையின்வளரும்முருகர்
இத்தருணம்என்னைக்கூட இசையவையடிசரணம் சொ

## பல்லவி.

இராகம்—பூரிகல்யாணி. ஏகதாளம்.

எப்போதுவந்தாரடி சீமியிங்கு

## அநுபல்லவி.

தப்பாதுதேவர்க ளெப்போதும்கொண்டாடும்
    தற்பரானந்த சம்போகசாமியிங்கு எப்
கட்டிப்புரண்டிரு கோலோடுகொல்பின்னி
    எட்டிகன்னங்கடித் தின்பசுகந்தா எப்
மூக்குத்திநத்து முருகுசரப்பளி
    சோக்குபுலாக்கு சுகந்தகந்தமுடன் எப்
வாரதில்லையென்று வக்கணைசொன்னவர்
    தீரமயிலேரி தீவிரமாயிங்கு எப்
அன்புடனேகவி பாடும்சவுடப்பன்
    இன்பமாய்ப்போற்றமன மிரங்கியிங்கு எப்

## பல்லவி.

இராகம்—தன்யாசி. தாளம்—சாபு.

கந்தாகடம்பா கைவிடுதுரையே கணவன்வரலாச்சே.

## அநுபல்லவி.

நந்தாவனஞ்சூழ்பழனுபுரிவளர் நாதனேயடியவர்வேதனையகற்றும் கந்

## சரணம்.

இரவிருபதும்பத்தும்செய்ததுபோதாதோ இன்னமுந்தயவில்லையோ
சரிசரியின்றினிசங்கதிவருமாகின் சையோகம்செய்திடசமயமுமில்லையோ கந்
கொங்கைக்குடமதிற்றெரியிதுநகக்குறி கொண்டவனிடமிந்த
சங்கதிரங்கநாயகிசொல்லுவள் சதிவருமென்சொந்த கந்
காலமறிந்தொருலீலைகள்செய்தால் கணவனுமறியானே
பாலன்கவிசவுடப்பன் பணியும்பழனுபுரியானே. கந்

## பல்லவி.

இராகம்—காபி. தாளம்—ஆதி.

கானமயில்வாகனனே கந்தாகுகனே.

## அநுபல்லவி.

வானவர்சகாயா வருவாய்வள்ளிநேயா
இங்கு வாரும் மையல் தீரும் படி சேரும் எந்தனை கான

## சரணம்.

ஒருவரையிதுவரை மருவிலனேமுன்னம் என்
சிறியமுலைதொட்டு இடையிறியும்படிநட்டு குளல்
சரியும்படிசரியாகவே புரிவாய்லீலையை கான

பரிதியுதையம்வரை பற்புலலீலைசெய்ய இது
பாகம் எந்தன்யோகம் வுனைப்பணிவே னினிவேகம் எனைப்
பாரும் கட்டிச்சேரும் சுகம்தாரும் முருகா கான

சித்திரக்கவிசவுடப்பன் தொழும்சிலா நின்
சித்தமிரங்காதோ இச்சிறியாள் மீதில்வாதோ குண
சீலா பரைபாலா வனுகூலா வேலவா கான

## பல்லவி.

மானேபோகச்சொல்லடி இப்போ

## அநுபல்லவி

தேனேபழனுபுரி சேவற்கொடியனை மானே

## சரணம்.

நீதிநெறியில்லாமல் வீதியிற்பாயைவிரித்
தோதுங்கொக்கோகமெல்லா மொருமிக்கசெய்வானடி மா

சுந்திரம்போலென்றென்னை வந்துதொந்தரிப்பது
சந்தமல்லவேயென்று சாற்றுவாயேவோடி மா

மேலும்கணவன்வரும் காலமுமாகுது
மூலைவீட்டுமீனுள் முழுதும்சொல்வானேயடி மா

எப்படியும்சவுடப்பன் கவிக்கிரங்க
தப்பாமல்சொல்லியே யிப்புரம்வாடிநீ மா

## பல்லவி.

இராகம்—எதுகுலகாம்போதி. அடதாளம்.

காசைநீவாங்கிக்கொள் கதிர்வடிவேலனே க்சங்குதென்தேகமெல்லாம்.

## அநுபல்லவி.

ஆசையிருந்தாலென்ன வாகுமோயிப்படி
ஆச்சதுஎந்தனுயிர் போச்சுதுநீதந்த காசை

## சரணம்.

கடித்தகன்னமிரண்டும் கனியிதழ்களும்விண்டு
கத்துதுயென்னசெய்வேன் காமவெறிகொண்டு
யிடித்தயிடியிற்றுடை சந்துமுதற்கொண்டு
யிற்றுவிழுகுது யில்லையிதுபோல்பண்டும் காசை

செப்புமுலையிரண்டும் குப்புரவாச்சுது
செகந்தனிலிதுவெல்லாம் தெரிந்திடலாச்சுது
ஒப்புக்குபிழைத்திடும் பிழைப்பெல்லாம்போச்சுது
ஒத்தைவீட்டுமீனுக் கொருவேலையாச்சுது காசை

முப்புரமெரித்திட்ட முக்கணன்பாலனே
முழுதும்புசிப்பதிலோர் பழுதுண்டுமசீலனே
அப்புரமொருமுறை பார்க்கலாம்வேலனே
அழகியசவுடப்பன் கவிக்கனுகூலனே காசை

## பல்லவி.

இராகம்—மோகனம். ஏகதாளம்.

குங்குமமேமிக குமுகுமுகுமுவென பரிமளம்வீசிடும் குங

## அநுபல்லவி.

எங்கும்புகழ்சரச செங்கதிர்வேலவர்
இல்லாதவேளையி லுல்லாசமாய்வீசும் குங

## சரணம்.

வித்தாரம்பேசியே யெத்தேசிகாலமும்
முத்தானமுலைபிடித் தொத்தாசைபேசும்
அத்தானவரிங்கு யெத்தாதவேளையென்
னுத்தாரமில்லாம லெத்தாகவீசும் குங

காலமறிந்துகவி மேலுமேலும்சொல்லும்
பாலன்சவுடப்பன் பாடல்பெருங்கந்தன்
சீலன்யினியிந்திர ஜாலம்செய்துவலங்
கோலம்செய்குவனே வாலைவள்ளிசொந்தன் குங

## பல்லவி.

இராகம்—ஆனந்தபைரவி. தாளம்—ஆதி.

சொல்லச்சொல்லக்கேளா தென்னடி சுகுணவதி

## அநுபல்லவி.

அல்லும்பகலழுதா லையன்வருவதில்லை
அவர்நமக்கினிவேண்டாம் அன்னமேவெகுதொல்லை சொ

## சரணம்.

கொண்டபெண்டுகளைப்போல குற்றங்கள்மிகசொல்லி
கொடுப்பவன்போல்வெகு கோபங்கள்செய்கிறான்
அண்டையயலார்காண கண்டதைச்சொல்லிநம்மை
ஆட்டுறான்வாட்டுறான் அடிக்கிறான்வைகிறான் சொ

செப்புகும்பக்குடங்கள் குப்புரவாச்சுதுந்தன்
செழிப்பெல்லாம்போச்சுது தென்பழனியில்வாசன்
கொப்புகுடைகடுக்கன் கொடுக்கிறேனென்றுதினம்
கோழிக்குடைபிடித்து குதித்துவருவான்நேசன் சொ

பாத்திரமறிந்தய்யா பாதகனிவரைப்போல்
பாரினிலொருவரை பார்த்ததேயில்லையம்மா
சூத்திரக்காரனடி சும்மாசுகிக்கதீரன்
சூதுசெய்பவன்நமக் கேதுக்கினிசும்மா சொ

சந்ததமும்சவுடப்ப னிவரைப்போற்றி
சலித்ததல்லாலொன்றும் பலித்ததேயில்லைபெண்ணே
இந்தமட்டினில்விட்டு இருப்பதேமிகமேன்மை
இனிநமக்கவன்வேண்டாம் யின்னம்சொல்வேனேகண்ணே சொ

## பல்லவி.

இராகம்—கமாஸ். தாளம்—ஆதி.

திறப்பாயடி திறப்பாயடி தீவிரமாய் மயல்மீறுது நிலையினி

## அநுபல்லவி.

திருப்பழனம்புரியுறைபவனடிநான் திரத்துடனிதழமுதளித்திடுமாதுநீ திற

## சரணம்.

பாவையேயினிமயல் பொறுப்பதுகனமே
பாயுதுமதன்கணை நீயுமிவ்வனமே
பூவணைமீதினிற் றுவியித்தினமே
பூட்டிசுகித்திட வாடிநீயனமே திற

கோதையேகோபமேதேதடி கூறாய்
கொடுமைபண்ணுறதெனைக் கொள்ளடிசீராய்
பாதகியேசகியேனடி காராய்
பணிகுவனேயுனை பாவிநீபாராய் திற

பரமனறிய சவுடப்பனைவிடுத்து
பார்த்திருக்கேனவ னெதிரியைக்கெடுத்து
திரமொடுமெலருன் சிகைதனிற்றொடுத்து
தீர்க்கிறேன்விரகமுன் மீதினிற்படுத்து திற

## கண்ணிகள்.

மனமறியாமையல் கொண்டேனே என்றமெட்டு.

ஆறுமுகவடிவேலனே என்னை ஆதரிப்பாய்குணசீலனே
மீறுதுகாமவிகாரமே என்னை மிரட்டுறான்மதனொருவாரமே
வஞ்சகம்செய்திடலாகுமோ வுந்தன் வம்சபரம்பரைபோருமோ
துஞ்சுமயில்வருமீசனே மனம் துடிக்குதுதெய்வானைநேசனே
வலியவந்தத்தைத்தள்ளல்பாபமே இந்த வாதைவிடாதெந்தன்தாபமே
சலியச்செய்கொக்கோகதீரனே இனி சாற்றுவன்கேளுபகாரனே
ஒருவரில்லாவேளையாச்சுதே எந்தன் வுரக்கமெல்லாமோடிப்போச்சுதே
பருவகாலமெல்லாமிப்படி தினம் பார்த்திருப்பதினியெப்படி
செப்புமுலைதொட்டுகூடுவாய் சவு டப்பன்பதமெத்தபாடுவாய்
ஒப்பிதம்செய்திடில்பொருத்திடும் வேறு தையலார்போகம்வெறுத்திடும்.

## காவ்டிச்சிந்துமெட்டு.

பெண் ஆனைமுகனுக்கிளைய வாருமுகவேலவரே
ஆடவரைநம்புவது மோசமே இந்த
ஜாடையல்லாமுந்தனுக்கு நாசமே.

ஆண் அன்னநடைமின்னரசே கன்னல்மொழிமாதரசே
அச்சமற்றென்னிச்சையுடன் கூடுவாய் மதன்
மெச்சமெத்தைமீதில்விளை யாடுவாய்.

பெண் நித்தியமும்வாரேனென்று சத்தியம்செய்தென்னைவென்று
நீதிதப்பிச்செல்வதுமக் காகுமோ எந்தன்
வீதிதப்பிப்போகமன மேகுமோ.

ஆண் கெண்டைவிழியாளே இந்த அண்டைவீடுஅம்புஜத்தை
கேட்டுவருவாயடியென் னாவியே விளை
யாட்டுகள்செய்யாதயடி பாவியே.

பெண் செப்புமுலையம்மணித்தா யுப்பரிகைமீதிருந்து
செண்டுவிளையாடினது ஞாயமோ மையல்
கொண்டுயிங்குவந்தது வுபாயமோ.

ஆண் முந்திசெய்தபந்துகள்ரெண் டெந்தன்கைபட்டாடவென்று
மொய்குளலழைத்தாளடி பாவையே இதில்
பொய்களொன்றுமில்லையடி பூவையே.

## வேறுமெட்டு.

பெண் காலகாலன்பெற்றபாலாவனுகூலாவடிவேலா என்னை
கட்டியணை மறைமூலா இந்த
களபத்தினை புளகத்தொடு அழியத்துகி லிழையக்குளல்
கட்டியணையடா சாமியிதற் கட்டிசொல்லாதடா காமி.

ஆண் பக்குவமுற்றிடு மானே செந்தேனே யினிதானே மிகப்
பகருவனேயினி நானே வுள்ளே
பாகத்தொடு மோகக்கணை வேகத்தொடு யேகத்தடம்
பாரிக்கவே மெத்தவிடடி முலைபூரிக்கவே கையில்கொடடி.
பெண் முக்கியகொக்கோகலீலை யதிகாலையுடன்மாலை இப்போ
முடித்திடுவோம் வெகுவேலை கணை
முருக்கப்பட மிருகத்துடை விரியக்கலை யிரியச்சுகம்.
மூட்டிடுவாய்தையல் மோகாமன நாட்டிடுவாய்வெகு யோகா.
ஆண் செண்டுமுலையாளேவாடி யென்னமோடி யிதழ்தாடி கவி
செப்பும்சவுடப்பன் கவிபாடி என்னை
சேரச்சுனை யோரத்தினில் வீரத்தொடு நேரத்தினில்
சேரவர்ராயடிமர்தே யங்கு சேருகிறேனானிப் போதே.

## பல்லவி.

இராகம்—ஆனந்தபைரவி. அடதாளம்.

என்னசெய்குவேன்சேடி யேதுமறியாதென்னை யிந்தக்கோலமசெய்கிறார்.

## அநுபல்லவி.

கன்னியிவறைவிட்டு காலங்கழித்ததுண்டோ காசினியறியாதோ
கர்ம்மமோ யிதுவர்ம்மமோ வெகுதர்ம்மமோ வலமர்ம்மமோ என்

## சரணம்.

சொன்சொற்றவராத சுப்பிரமண்யசீலன்
சோர்விலாதமலை மகழருளியபாலன்
பன்னகவைரிமீ தேரும்பழனிவேலன்
பரத்தையர்கலவிக் கிசைந்திடுமனுகூலன்
பண்டுகெண்டுகைக் கொண்டதீரனை
கண்டுவாடிமயல் கொண்டமாரனை என்
வாசங்கமழும்யெக்தன் வாசல்வழியிற்கூடி
வம்புசண்டைக்காரி வாசல்தன்னைநாடி
கூசலில்லாதுகொடுக் கிறார்பணம்கோடி
கொம்புகளவழ்க்குண்டோ கோதையேநீபோடி
குண்டுமுலைக ளிரண்டையுங்கைக்
கொண்டசுமுகனைக் கண்டுவாடிமெய் என்
பஞ்சணைமீதிற் படுக்கவுமுருகுதே
பாக்கியனைக்காண மனமுங்கருகுதே
செஞ்சொற்சவுடப்பன் பாடலும்பெருகுதே
சிக்கிக்கொண்டேனடி தென்றலும்வருகுதே
தேருதலைசொல் வாருமிலையினி
தாருமெனையிது பாரமுனதினி. என்

## பல்லவி.

இராகம்—புன்னாகவராளி. ஏகதாளம்.

மையலாகினேனய்யா ஐயா.

## அநுபல்லவி.

மையலாகிநெஞ்சம் வாடுதென்செய்வேன்
மகிமைபெருஞ்சுப்ரமண்ய மகாயோகனே மை

## சரணம்.

பாகுபாலொடுபழம்கசப்பானேன் பரிதாபமுற்றயிடமேவினேன்
சோகவாரியுற்று சுழலாமலே சுந்திரமிரந்தர துரந்தர பெருந்துயர் மை

கதிவேறில்லையுனையன்றிவேறே கடைக்கண்பார்த்தென்னைக்காரையா
மதிகாய்மாரன்மலர் தூவுறான் மயக்குதே தியக்குதே சுயக்குணமனாளா மை

பாலன்சவுடப்பன்போற்றும்குணநாதா பாவையெனக்கட்டியணைபலாகாதா
சாலம்செய்யவேண்டாம்ஷண்முகவினோதா சந்தமுலைநொந்துமனம் வெந்
[ததுகுணாளா மை

## பல்லவி.

மயக்கமென்னடி வெகு மயக்கமென்னடி.

## அநுபல்லவி.

மயக்கமெல்லாம் தெரியுந்தெரியும்
மாரன் துயர் தீரும்படி சோமன்குமரேசன்றரு
மயக்கமெல்லாம் தெரியுந்தெரியும்
மாயவித்தையென்னிடத்தில் மாற்றிவைத்துவுள்ளதெல்லாம்
மனமுவந்து சொல்வாய்கொண்ட மய

கொங்கைக்குறிவந்ததென்ன
கோலன்மயில் வேலன் அநுகூலன் செய்கோலமோ
கொங்கைக்குறி வந்ததென்ன
கொஞ்சிடுமிதள்கனிந்துகண்கள் மிஞ்சிசிவந்துயிருப்பதெல்லாம்
மிதமாகச்சொல்வாய் கொண்ட மய

சீலசவுடப்பன் பணியும்
சித்ரன் பரைபுத்ரன் குணமித்ரன் சரித்ரன்
சீலசவுடப்பன் பணியும்.
சீமானதிகேமனென்று எமயாகசசெய்ததெல்லாம்
எற்குமெனரேயிருந்தாய் சும்மா மய

## பல்லவி.

(தர்ம்மசம்வர்த்தனி மாயம்மா என்றமெட்டு)

செந்தமிழ்க்கவிமாலை பூண்டவனே    சின்னம்மணி
சேரவுனையழைத்தோடி வரச்சொன்னாள்
மந்தமாருதம்வீச நொந்தாளாம்    இந்தவேளை
மதியுமதிகமாய்காய வெந்தாளாம்    வந்தாளா    செ

மீருமசுரரை வேரறுத்தவனே    உன்னைவேண்டி
மிகவும்மயல்கொண் டுருகிவாடுகிறாள்
மாருபட்டுடல் வேறுபட்டிடுமே    வாராவிடில்
மயக்கமுற்றிருகண்கள் நட்டிடுமே    தொட்டிடுமே    செ

கொஞ்சமும் பாலன்னமுண்ணாமல்    கண்கள்கூசி
குருகிவெகுநீர்பெருகி யோடுதே
துஞ்சுமயில்மிசை யேறிவந்தவனை    இந்தவேளை
துரிதமாய்க்கார்த்தாளும் நொந்தவளை    கந்தவேளை    செ

அப்பனேயென்னையனே சிகியே    சவு
டப்பனுக்குன் பாதமேகெதியே
மப்புநிகர்துய ரிப்பவேதீர்த்து    ஆளவேணும்
மங்கையொளிர் முகங்களைப்பார்த்து    மிகவோர்ந்து    செ

## பல்லவி.

இராகம்—பியாகடை.    தாளம்—ஆதி.

மானேமரகதத்தேனே நானோர் மாற்றஞ்சொல்லுவேனதை மாற்றாதேயடி.

## அநுபல்லவி.

தேனார்கடம்பன் தாரணிமார்பன் தீரன்சூரசம்மாரதிவீரன்
மானார்தமைக்கொளவே வருசோரன் மரகதமயிலனைமறவாதேயடி.    மா

## சரணம்.

பாலும்சக்கரைதேனும் பாற்பாயசவடையும்
பலர்சொல்லியுண்ணுவரோ பான்மொழியே
நாலுமாருந்துதிக்கும் வேலுமுருகனையன்
நற்கதிதருவாரே நன்மொழியே—யடி    மானே

பெண்ணாகுமுன்பிறவி நண்ணாகவேணுமென்றால்
கண்ணானகந்தனைச் சேரடியோ
விண்ணாணம்பேசாதடி தண்ணார்கமலக்கண்ணே
விருந்துண்ண வாவென்றின்னம் கூறடியே—யடி    மானே

முத்துவடமணிந்த குத்துமுலையழுந்த
முருகனுடன்மெத்தைதனில் கூடியே
பத்தன்சவுடப்பனை நித்தம்ஆளுவாயென்று
பண்புடன்பதம்பாடி ஆடடியே—யடி    மானே

## பல்லவி.

இராகம்—கமால். தாளம்—ஆதி.

இந்தசுந்தாவனத்தில் யிருந்துசுகமருந்திடுவாய்

## அநுபல்லவி.

கந்தவேளிவ்விடத்தில் வந்திடுவார்கண்மணியே இந்த

## சரணம்.

வாழைபலாகமுகு வல்லிதிருவாத்திபச்சை
வளர்பவழமல்லிமுல்லை மருகுகொய்யைகூதம்
தாழைகொன்றைமாதளையும் தண்கமலம்ரோஜா
தளிர்த்தவனமிதுகுகனை் தழுவிடவேநீதம் இந்

தென்னைமாமாம்புரசு தெளிந்ததும்பையாளிகளும்
தேர்சுதபிச்சைசெண்பகப்பூ செண்மேல்லியோடும்
புன்னைகோங்குசெம்பருத்தி புதுமையுள்ளயிவ்வனத்தில்
புணரடிகுமாரனைநீ புண்யமிககூடும் இந்

பூலாங்கிழங்குயெலுமிச்சை கொழுமிச்சைநல்ல
பூஞ்சாறுமஞ்சளுண்டு பூசடிநீபெண்ணே
ஜாலம்செய்யாமல்சவு டப்பன்பதம்பாடிமிக
சரசமுடன்கூடிடுவாய் சண்முகனைக்கண்ணே இந்

## பல்லவி.

இராகம்—கமாஸ். தாளம்—ஆதி.

எதுயென்னிடம்வாது செய்வதடிமிக
எக்கச்சக்கம்பேசுவது வொக்குமோடிமாதரசே

## அநுபல்லவி.

பூதலமுதல்பணியும் மாதவன்மருகனடி
சேதியறியாமற் குதிக்காதயடிபாதகியே எது

## சரணம்.

ஒருத்தனையிருத்திவைத் தொருத்தனைமறைத்துவைத்
தொருத்தனைப்புறத்தில்வைத் தொருத்தனிடமே
சிரித்துச்சிரித்துகழுத் தருத்திடும்பரத்தையே
சிரத்தையருப்பேனடி வெறுத்திடினுனையினி எது

கொத்துச்சரமுத்துமாலை கொப்புகுடைக்கடுக்கனும்
கொத்தசரப்பளிசுத்து கொள்ளவில்லையோ
மெத்தமெத்தயெத்துக னெனக்குவிற்கவரலாமோ
மெத்தையில்படுத்துமன மொத்துமுத்தம்தராமல் எது

மாமன்மகளுங்கியவக் காமன்கணையடுத்தென்னை
ஊமமோடலட்டுகுது என்னசெய்குவேன்
தாயிதம்செய்யாமல் சவுடப்பன்பதம்பாடியென்னை
தழுவியணைந்துமுத்தந் தாடிமயிலேயடி எ அ

## பல்லவி.

இராகம்—பரசு. தாளம்—ஆதி.

மருவியிருந்துகொள்ளடி யுனக்கேனிந்த
மயக்கம்வரும்சுகிர்த முனக்கேதெரியவரும்

## அநுபல்லவி.

அறிவிலுயர்ந்தமுரு கேசனைநேசனை
அன்பர்புகழ்பழனி புரிவாசனை—திட
ஜகதீசனை குண மகராசனை கண்ணே பிரகாசனை மருவி

## சரணம்.

பரத்தையர்க்கனுகூலன் பழனியம்பதிவேலன்
பாவையேயுன்னைப்போலே பூவையருண்டும்—இதோ
பஞ்சணையுண்டும் வந்தன் பந்துகள்ரெண்டும் அழுந்த
பண்புடனணைகுவாயக் கெம்பீரனையும்கண்டு மருவி

அழகியதீரனடி பழகியமாரனடி
அன்னமேவிரைவினி லங்குநீசென்று—அவர்
முன்னினில்நின்று என்னை மன்னியுமென்று செப்ப
ஆசைதீரவருவாரே நேசமுடனேயின்று மருவி

கனிவுடனேதேடி கந்தனைமிகக்கூடி
கண்ணேசவுடப்பன் புகல்கவிதைப்பாடி—மிக
காரியம்பாராய் வெகுவீரியம்கூறாய் அதி
கட்டழகமைந்தவனைக் கட்டியணைந்தாசைதீராய் மருவி

## பல்லவி.

(மானேயங்கேபோன வகையென்னடி என்றமெட்டு.)

சாமியுனக்கித்தனை சோகமென்ன—எந்த
சக்களத்திவலையில் சிக்கவைத்தாளோசொல்

## அநுபல்லவி.

மிக்குள்ளஎந்தன்மகளைப் போல்வேறொரு
பாண்மணியுண்டுமோ புண்யகுமரேசா சாமி

## சரணம்.

ஆசையைமூட்டியுன் காசைப்பறித்துன்னை
ஆட்டுவோர்வாட்டுவோர் சேட்டைகள்செய்வாரே
வீசையாகிலுமுன் மீதிலாசையில்லை
வீணிலலட்டி வெருட்டியேவைவாரே — சாமி

போனதுபோகட்டு மென்மனோநாடியென்
புண்யகுமாரியைக் கூடியிருவரும்
ஆனபடிபல லீலைகள்செய்குவீர்
ஆண்டவனேயில்லி யில்லையொருவரும் — சாமி

முக்கியகொக்கோக நூலிற்புகன்ற
முறைப்படியேகூடாய் முத்திதரும்சீலா
தக்கபடிகவி செப்புஞ்சவுடப்பன்
தன்மையறிந்தருள் தண்பழனிவேலா — சாமி

---

## நோட்டு பங்காளா.

## பல்லவி.

மரகதமயில்வருபெரியவனே மருவிடிலுனேநிகரொருவரில்லை.

## அநுபல்லவி.

திரமையுருங்கன குணசீலன் திருவளர்பழனம் பதிவேலன்
தீராத்துயர்தீர்த்தருள் லோலன் திடமேவிய பார்பதிபாலன்
சித்திரனே மித்திரனே புத்திரரைத்தரு கர்த்தனுமாகிய — மரகத

மலைமகள்தரு முருகனேநாடி மலர்பரவிய வணைதனிற்கூடி
கலவிகள்பலபல விதமாடி களிகொளமடமயி லேபோடி
கதிதருவார் நிதிதருவார் முதியவர்தொழவரு முதல்வனுமாகிய — மரகத

குங்குமகுமுகுமு வெனத்தீட்டி குளிமலர்கொண்டை தனிற்சூட்டி
சங்கையில்லபிநயம் தனைக்காட்டி சவுடப்பன்பதமதை யூட்டி
ஷண்முகனே எண்சுகனே மண்ணவர்பண்ணிய புண்ணியனாகிய — மரகத

## பல்லவி.

இராகம்—கமாஸ். தாளம்—ஆதி.

சூரசம்மாராகுகனேஎனை சுகமுடன்மருவியோர் புதல்வனையருள்புரி.

## அநுபல்லவி.

சாரம்அறியாதவர்போல் காட்டுரீர் இன்று
சத்தியமாகவுருவில் பத்துநாழிகையில்வந்து
மெத்தையில்படுத்துமுத்தம் மெத்தமெத்தவைத்துதுகில்

அத்தனையுமவிழ்த்தந்த சித்தஜன்கணைமுரிய
நித்தமென்னைச்சேராவிடில் கர்த்தனேயினிச்சகியேன் சூரா

கூறும்பிருகுசமிக விம்முதே விம்மி
கொக்கரித்தவர்கள்போல பொக்குபொக்கெனவெழுந்து
பக்குவமதாக்கவிட்ட கொக்குநிரமுற்றரவுக்
கைக்குவிட்டகட்டையுடைத் திக்கணம்வெளிக்கியெட்டி
சொக்குதுராஎனன்னசெய்வேன் குக்குடக்கொடிபிடித்த சூரா

சேரும்மதன்மனே தனில்சுரத நீரு
சேருசேராய்வடிந்திரு வாழைதுடைமீதில்வடிந்
தாருதடாபூமியினிற் காருமடாயித்தருணம்
சாரமில்லையென்றிருந்தால் காரியமுமுடியாது
எருமயிலேறிவிளை யாடுமுருகோனேதீர சூரா

பாலன்சவுடப்பன் போற்றும்பாதனே எந்தன்
பஞ்சணையலங்கரித்தேன் கொஞ்சிவிளையாடவுனை
சஞ்சலமினியென்னடா தஞ்சம்புகுந்தேன்
கெஞ்சிக்கெஞ்சியுஞ்சலித்தேன் வஞ்சகம்செய்திடலாமோ
கஞ்சன்மருகன்மருகா துஞ்சுமயில்மேல்வருக சூரா

---

## ஆனந்தக்களிப்பு.

(தானதனதந்தனனே)

திருவளர்பழனியம்பதியில் வளர்
தேவாதிதேவனே தெள்ளியவமிர்தே
அருமறைமீதினிலாடும் எந்தன்
அய்யனேபன்னிரு கையனேதுய்யா
சரவணபவகுகநாதா ஒளிர்
சடாட்சரமானவா ஷண்முகாவவாவா
பரமதயாளாகுணாளா வாவா
பாபவிமோசனா பக்தர்சகாயா
பாவியான்துன்பத்திலாழ்ந்து மிக
பாதவித்திருப்பது பாராததென்ன
கோபமென்மீதினிலுண்டோ கோழிக்
கொடியனேயடியனைக் காத்திடவாவா
நெஞ்சினில்வஞ்சனையெண்ணி ஒருவன்
நேசனைப்போலவே பாசாங்குபண்ணி
தஞ்சமாயென்பூமிதன்னை விரைவில்
தட்டிப்பறிக்கத் தலையெடுத்தானே

வீணாகயென்பொருள்முழுதும் அவன்
விரையம்செய்யவைத்தான் வேலேந்தும்கையா
காணாதபொருளெல்லாம்காட்டி தந்து
கவலையைத்தீர்த்திடும் கற்பகக்காவே
வுள்ளதைக்கொள்ளைகொள்வானேல் நான்
வுய்யுவதெங்ஙனம் ஓதுவாய்நீயே
எள்ளளவும்கருணையில்லான் என்னை
ஏமாற்றுவதெல்லாம் வுனக்குசம்மதியோ
எந்தன்பொருளல்லவையா இது
என்னையாழ்கர்த்தனே வுன்னதேயாகும்
வந்துவந்தலட்டுரான்யென்னை எந்தன்
வயிற்றிலனல்மிகப் பெருக்கவேமூட்டி
அல்லும்பகலொன்றுமின்றி வந்து
அலட்டுரான்யென்செய்வேனாறுமுகேசா
தல்லியம்பிகைபூசைசெய்ய அவன்
தடுக்கிறான்திரவியச் செருக்கினாலன்றோ
காலனைக்காணுவபோல மனம்
கலங்குதேபழனியம் பதிவளர்கந்தா
வேலனேயுன்னாணைசொல்வேன் என்னை
வேதனைசெய்திடும் பாதகனைத்தான்
பாதிம்திசூடும்சொக்கர் அவர்
பாதந்தன்னாணை பரைபதத்தாணை
ஆதிகணேசர்தன்னாணை ஆதி
அச்சுதன்தன்னாணை யலர்மகளாணை
வாலைபுவனைவராகி ஆணை
வானரவீரனனுமந்தனாணை
காலனையவன்னாணை கொடும்
கட்செவிதீண்டியே காலனூர்சேர
செய்திடுவாயிருவாரம் தன்னில்
செந்திமலைவளர் கந்தனேயெந்தா
கைதியின்பொருட்டனிலங்கி வீழ்ந்து
கலந்தெறிதன்மையென் கண்ணிற்காணேனோ (தானாதன)

## ஒயில்கும்மி.

பொன்மலைவாசனை யுன்மனநேசனை
பூவையேகூடி சுகித்திருப்பாய்
புகழேமிக பெருகும்வுனை
யிகழாரடி யொருபோதினும்
பொண்மயிலேயெந்தன் கண்மணியே

72200

கோடிசூரியரு மோருருவாகக்
குறுகியதன்மையைக் கொண்டமெய்யன்
சூரிக்கப்படுமோ செயலை
விரிக்கப்படுமோ வழகை
கூறொணுகோமள வேலனடி

கள்ளத்தனமாக யென்பூபறிக்கவே
கச்சேரியேரிகை கட்டவைத்த
கசடந்தனை யடுவானடி
பிசகொன்றிலை யனமேயினி
காரியம்பாரடி வீறியமாய்

பாவிவியாஜியம் தன்னில்சிலவான
யாவியைக்கொன்று பணத்தையெல்லாம்
பரிவாகவே தருவாரடி
அருமாமுகன் வருவாரடி
பையப்பையவாசை மூட்டிடுவாய்

காணக்கிடையாத தங்கமடிமூடக்
கஞ்சனைக்கொன்றவன் மருகனடி
கதிர்வேல்கொடு வருசூரரை
அதமேசெயு மதியாளனை
கட்டியணைத்துக் களித்திடுவாய்

எத்திசையும்புகழ் சத்திவடிவேலன்
இன்பசுகந்தரு திங்கனடி
இரவும்பகலுங் கலவியி
லுருகும்படியே புணருய்
எங்கள்குலக்கொடி மங்கையரே

வாசங்கமழ்முல்லை மல்லிகைசூடியே
வள்ளலோடுநீயு மஞ்சமுற்று
வழகும்புகழும் ஒழுகும்
பழனம்புரியில் வளரும்
அற்புதனைக்கூடி வாழ்ந்திருப்பாய்

## தில்லானம் ஊஞ்சல்.

சந்திரஞ்சேர்நந்தவனம் சூழ்பழனுபுரிமுருகர்
விந்தையுள்ளவூஞ்சலேறி விசையுடனேஆடுராரே — தில்
சூம்பமுலைவள்ளிதெய்வ குஞ்சரமுமூவருமாய்
ஐம்பொன்னூஞ்சல்தனிலேறி அழகுடனேஆடுராரே — தில்
பரனும்பராபரியும் பண்ணவரும்நெருங்கிடவே
விருதுபறைமுழங்கிடவே விசையுடனேஆடுராரே — தில்
தாளமத்தாளமுடன் தவில்முரசுபேரிகடம்
காளநாகசுரமூத கதிர்வடிவேலாடுராரே — தில்
அன்னநடைமாதர் ஆலாத்தியேந்திநிற்க
சன்னஜாடையாயிருந்து ஷண்முகரும்ஆடுராரே — தில்
தீவட்டிமத்தாப்புகளும் திகுதிகெனவேயெரிய
பூவெட்டிவேர்சொரிய புண்ணியருமாடுராரே — தில்
பைந்தொடிகுமாரவேளின் பாதம்வருடிநிற்க
மைந்தன்சவுடப்பன்தொழ மகிழ்வுடனேஆடுராரே. — தில்

## தாலாட்டு.

சீர்பெருகும்தென்பழனி சேவற்கொடிவேலவரே
பார்புகழமலரணையிற் பண்புடனேகண்வளராய்
திங்களணிசங்கரனுர் தேடிவைத்ததிரவியமே
தங்கமயிலேறிவரும் தன்னியனேகண்வளராய்
மான்விழியாள்வள்ளிதன்னை மாலையிடவேனுநி
தேன்பொழியுங்கானகத்தில் திரிந்தவனேகண்வளராய்
மத்தாலடியுமுண்ட மாயவனுர்மருகோனே
முத்தானபஞ்சணையில் முருகவேழ்கண்வளராய்
பாண்டியனுக்காகவெகு பரிகள்விற்றோன்மருவியதோர்
ஆண்டிச்சிபெற்றெடுத்த அருமறையேகண்வளராய்
மண்வெட்டுமொட்டனுக்கு மனையாட்டியாயிருந்த
வெண்பட்டுடையாள்பயந்த வித்தகனேகண்வளராய்
பாலகனும்சவுடப்பன் படுந்துயரம்தீர்த்திடவே
கோலமுள்ளபஞ்சணையில் குமரவேள்கண்வளராய்
பரையருளும்பாலகனே பண்ணவர்க்கேநாயகனே
வரையாளிதனைவதைத்து வண்மையுடன்கண்வளராய்
கச்சேரியிருகைகள் கட்டிநிற்கவைத்த
பிச்சைவரையாளிமாள பெருமையுடன்கண்வளராய்
த்தியனேநின்மலனே நிஷ்க்களமேகற்பகமே
த்திசையும்புகழ்பெரவே எனைக்கார்த்துகண்வளராய்,

---

## துயில்நீக்கல் (உதயராகம்)

பாழீயல்கியகோலமொடுதிகழ் பன்னிரண்டுகைவேலனே
கொழிதனதிருசிரகையுதரியே கூவுதுலகிலுளோரெலாம்
நாழிகைக்குளுதையமாமென நவின்றுதோத்திரம்செய்கிறார்
ஆழிதனிற்றேவர்சங்குமுழங்குது அனந்தலோதுயிலுணர்ந்திடாய்

பம்பைதவிலொடுமுளவுசச்சரி பாண்டிலுருமிமல்லாரியும்
கம்புமுழங்கிடவும்பர்வந்துன்னை காணவென்றவர்நிற்கிறார்
வம்புலாவியகும்பதனமுரும் வள்ளிநாயகிவடிவிலே
அம்புவிழிமடமாதர்தொழுகிறார் அனந்தலோதுயிலுணர்ந்திடாய்

களபகந்தமும்செவந்திதும்பையும் கனகதாமரைமுல்லையும்
தளதளனவொளிர்குமுதமருகுடன் சாதிமலர்கள்பன்னீருடன்
பளபளனவொளிர்கனகதட்டினில் பரவிவந்துனைதொழுகிறார்
அளகுகளிகொளும்பழனிமுருகனே அனந்தலோதுயிலுணர்ந்திடாய்

கண்டுசக்கரைகதலிமுந்திரி கனிந்தபனசமுங்கன்னலும்
விண்டமாதளை விசைந்தபாகுநெய் விரும்புதேனிளநீருடன்
குண்டுமுலைமடமாதர்கொணர்ந்தவர் குறைகள்சொல்லியேநிற்கிறார்
அண்டர்தொழுதிடும்பழனிமலைவளர் அனந்தலோதுயிலுணர்ந்திடாய்

நாலுமாமறையோதியேசிலர் நாமவாழிகள்பாடுறார்
சேலும்விழிமடமாதரிருபுரம் சேர்ந்துசாமரைவீசுறார்
பாலன்சவுடப்பன்பணிகிறானுந்தன் பாதமேகதியென்றுமே
ஆலமுண்டரனருநாதனே அனந்தலோதுயிலுணர்ந்திடாய்.

## மங்களம்.

இராகம்—பூபாளம். தாளம்—சாபு.
மங்களமங்களம் நித்யசுபமங்கள மங்களம்.

### அநுபல்லவி.

திங்களணிந்த சிவனுக்கும்தேவிக்கும்
திருவுக்குமாற்க்கும் தேவேந்திரனிந்திராணிக்கும் மங்

### சரணம்.

அல்லலகற்றும் வல்லங்கிநகர்சவு
டம்மைராமலிங்க ராஜாமுகவற்க்கும்
சொல்லும்வராகி கலைமகட்கும்கவி
சூட்டும்குருமுத்து சாமிநற்றாயர்க்கும் மங்

பத்தாயிரங்குலத்தோருக்கும் யாவர்க்கும்
பழனியம்பதிவளர் வேலர்க்கும்வேலுக்கும்
உத்தமியாகிய வள்ளிதெய்வானைக்கும்
உயரும்பொற்கோழிக்கும் ஓகைமயிலுக்கும் மங்

வஞ்சகாளிதன்னையே வதைத்திடும்தெண்டிற்கும்
வானவர்தங்கட்கும் வானரவீரர்க்கும்
பரையருளால்வந்த பாலன்சவுடப்பன்
பாடும்கவிக்கும்நற் பாக்கியம்பவுஷருக்கும் மங்

சுபம். முற்றிற்று.

172200